36. நீர்த்துளிகளும் 5 மி.மீ. விட்டத்திற்கு மேல் உள்ள பனித்துளிகளும் கலந்து காணப்படும் பொழிவிற்கு _______ என்று பெயர்.

1. மழை
2. கல்மழை
3. உறைபனி மழை
4. ஆலங்கட்டி மழை

37. கூற்று (i): மழைப்பொழிவு நீர்த்துளிகளின் வடிவத்தில் உள்ளதால் மழை எனப்படுகிறது.

கூற்று (ii): நீர்த்துளிகள் 0.5 மி.மீ. விட்டத்திற்கு அதிகமாக இருந்தால் மழைபொழிவு எனவும் 0.5 மி.மீ. க்கு குறைவாக இருந்தால் அதை தூறல் எனவும் அழைக்கப்படுகிறது.

1. கூற்று i சரி ii தவறு
2. கூற்று i தவறு ii சரி
3. கூற்று i மற்றும் ii தவறு
4. கூற்று i மற்றும் ii சரி

38. ஆலங்கட்டி மழை கீழ்கண்ட எந்த மேகங்களுடன் தொடர்புடையது.

1. கார்திரள் மேகம்
2. திரள் மேகம்
3. படை மேகம்
4. கீற்று மேகம்

39. மேகத்திலுள்ள வெப்பம் குறைவதால் நீராவி அடிக்கடி நேரடியாக _______ஆக மாற்றப்படுகிறது.

1. உறைபனி
2. கல்மழை
3. பனிக்கட்டி
4. மழை

40. புவியின் மேற்பரப்பிலுள்ள மண்ணின் அடுக்கிற்குள் நீர்ப் புகுவதிற்கு _______ என்று பெயர்.

1. நீர் ஊடுருவல்
2. நீர் வழிதல்
3. நீர் தள்ளுதல்
4. நீர் கொள்ளல்

41. நீர், மண்ணின் இரண்டாவது அடுக்கிலிருந்து அல்லது புவியின் மேற்பரப்பு வழியாக ஆறுகளிலும், ஓடைகளிலும், ஏரிகளிலும் பெருங்கடலுக்குச் செல்லும் முறைக்கு _______ என்று பெயர்.

LIVEWORKSHEETS

1. ஆவி சுருங்குதல் 2. ஆவியாதல்

3. நீர் உட்கசிந்து வெளியிடுதல் 4. நீர் வழிந்தோடல்

42. நீரானது தாவரங்களின் இலைகளிலிருந்து நீராவியாக மாறுவதற்கு ______ என்று பெயர்.

1. நீர் உட்கசிந்து வெளியிடுதல் 2. நீர் சுருங்குதல்

3. நீராவி சுருங்குதல் 4. பொழிவு

43. குடிப்பதற்கு உகந்த நீரை ______ என்று அழைப்பர்.

1. நிலத்தடி நீர் 2. மேற்பரப்பு நீர்

3. நன்னீர் 4. ஆர்ட்டீசியன் நீர்

44. பொருந்தாத இணையைக் கண்டறிக.

1. மழை வழிவின் கனஅளவு - ஏக்கர் அடி / கனஅடி

2. நீர் வழிந்தோடல் - கனஅடி / விநாடி

3. மழைபொழிவு - அங்குலம் / மி.மீ. / செ.மீ.

4. ஆவியாதல் - கனஅடி / விநாடி

45. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும். நீராவியாதல் என்பது,

i நீராவி நீராக மாறும் செயலாக்கம்

iii. நீர் நீராவியாக மாறும் செயலாக்கம்

iii. நீர் 100°C வெப்பநிலையில் கொதிக்கிறது. ஆனால் 0°C வெப்பநிலையில் ஆவியாக ஆரம்பிக்கிறது.

iv. ஆவியாதல் மேகங்கள் உருவாக காரணமாக அமைவதில்லை.

1. i, iv சரி 2. ii சரி 3. ii, iii சரி 4. அனைத்தும் சரி

46. பொருத்துக.

i. தாவரங்கள் - a) மேகங்கள்

ii. நீர்சுருங்குதல் - b) கல்மழை

LIVEWORKSHEETS

iii. பனித்துளி மற்றும் மழைத்துளி - c) புவியின் மேற்பரப்பு

iv. நீர் ஊடுருவுதல் - d) நீர் உட்கசிந்து வெளியிடுதல்

1. i - d , ii - a, iii - b, iv - c
2. i - d, ii - b, iii - a, iv - c
3. i - b, ii - a, iii - d, iv - c
4. i - d, ii - b, iii - c, iv - a

47. கூற்று: நீர்த் துளிகள் புவியின் மேற்பரப்பில் குளிர்ந்த பொருள்களின் மீது படும்பொழுது பனி உருவாகிறது

காரணம்: பொருட்களின் வெப்பநிலை பனிநிலையின் வெப்ப நிலையைவிட அதிகமாக இருக்கும் போது உருவாகிறது. (NMMS 2019-20)

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

(3) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

(4) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது

48. நீர்த்துளிகளும், 5 மி.மீ விட்டத்திற்கு மேல் உள்ள பனித்துளிகளும் கலந்து காணப்படும் பொழிவிற்கு _______ என்று பெயர். (NMMS 2019-20)

(1) ஆலங்கட்டி மழை
(2) பனி
(3) மழை
(4) கல் மழை

LIVEWORKSHEETS